மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# படிவம் 5 தமிழ் இலக்கியப் பாடம் பயிலும் மாணவர்களிடையே மரபு கவிதையின் ஓசை நயங்கள் மீதான புரிதல் நிலையை 'Error Analysis' கோட்பாட்டின் வழி ஆராய்தல்

# Error Analysis Study on The Level of Understanding of the Intonation of Traditional Poetry among Form 5 Tamil Literature Students

மனோஷ் இராமா/ Mannosh Rama[1]
[1]M. Ed Scholar, Faculty of Languages and Communication, Sultan Idris Education University
Corresponding Email: mannosh.mr@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இந்த ஆய்வில் மலேசிய நாட்டைச் சேர்ந்த படிவம் 5 தமிழ் இலக்கியப் பாடம் பயிலும் மாணவர்களிடையே மரபு கவிதையின் ஓசை நயங்கள் மீதான புரிதல் நிலையை ஆராயவிருக்கின்றது. படிவம் 5 தமிழ் இலக்கியப் பாடம் பயிலும் மாணவர்கள் மரபு கவிதைகளின் ஓசை நயங்களைப் பயில்வதிலும் அவற்றைக் கண்டறிந்து பகுத்தராய்வதிலும் சிக்கல் எதிர்நோக்குகிறார்கள். இச்சிக்கலை முன்னிருத்தி இந்த ஆய்வு 3 நோக்கங்களைக் கொண்டு எடுத்தாளப்பட்டுள்ளது. அவை படிவம் 5 தமிழ் இலக்கியப் பாடம் பயிலும் மாணவர்களிடைய மரபு கவிதையின் ஓசை நயங்கள் மீதான புரிதலைக் கண்டறிதல், படிவம் 5 தமிழ் இலக்கியப் பாடம் பயிலும் மாணவர்களிடையே மரபு கவிதையின் ஓசை நயங்களைப் பயில்வதிலும் கண்டறிவதிலும் எதிர்நோக்கும் சிக்கல்களுக்கான காரணங்களைக் கண்டறிதல், மரபு கவிதையின் ஓசை நயங்களைப் பயில்வதிலும் கண்டறிவதிலும் மாணவர்களிடையே ஏற்படும் சிக்கல்களைக் களைய தீர்வுகளைக் கண்டறிதல் என்பதேயாகும். மலேசிய நாட்டில் இருக்கும் தைப்பிங் வட்டாரத்திலிருந்து 20 படிவம் 5 தமிழ் இலக்கியப் பாடம் பயிலும் மாணவர்களும் 5 தமிழ் இலக்கிய ஆசிரியர்களும் இந்த ஆய்வில் ஆய்வு மாதிரிகளாக உட்படுத்தப்பட்டுள்ளனர். இவ்வாய்வானது அளவாய்வு அமைப்பில் வடிவமைக்கப்பட்டுப் பண்புசார் அணுகுமுறையிலும் அளவுசார் அணுகுமுறையிலும் எடுத்தாளப்பட்டுள்ளது. 'Error Analysis' கோட்பாடு இவ்வளவாய்வில் கையாளப்பட்டுள்ளது. மதிப்பீட்டுத் தாளும் Likert Scale மதிப்பீட்டுத் தாளும் இவ்வாய்வில் ஆய்வுக் கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வின் முதல் இரண்டு நோக்கங்களின் தரவுகள் யாவும் மதிப்பீட்டுத் தாளும் Likert Scale மதிப்பீட்டுத் தாளும் மூலம் திரட்டப்பட்டன. ஆய்வின் மூன்றாம் நோக்கமானது 5 இடைநிலைப்பள்ளித் தமிழ் இலக்கிய ஆசிரியர்களை நேர்காணல் செய்து தரவுகள் திரட்டப்பட்டன.

**கருச்சொற்கள்:** ஓசை நயம், மரபு கவிதை, படிவம் 5 தமிழ் இலக்கிய மாணவர்கள், புரிதல் நிலை, சிக்கல்கள், தீர்வுகள்

**Abstract**

This study investigates the level of understanding of the intonation of traditional poetry among Form 5 Tamil Literature students in Malaysia. Form 5 Tamil Literature students face challenges in analysing and learning the intonations of conventional poetry. Hence, this research incorporates three perspectives to address these challenges: evaluating the understanding level of intonation of traditional poetry among Form 5 Tamil Literature students, analysing the reasons for the difficulties faced by Form 5 Tamil Literature students in learning and analysing the intonation of Traditional poems, and identifying solutions to overcome these challenges. The study involves 20 Tamil literature students and 5 Tamil literature teachers from Taiping, Malaysia, as research samples and subjects. This survey research incorporated a mixed method research design and implemented the 'Error Analysis' theory. Questionnaires and the Likert Scale were used as research instruments to collect data for the research's first and second objectives. Data for the third objective of the study was collected by having standardised open-ended interviews with 5 Tamil Literature teachers.

**Keywords:** Form 5 Tamil Literature students, Intonation, Level of understanding, Traditional Poetry, Challenges, solutions

**முன்னுரை**

மலேசியத் தமிழ்க்கல்வித் திட்டத்தின் கீழ் இடைநிலைப்பள்ளிகளில் தமிழ் இலக்கியப் பாடம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது (சாமிக்கண்ணு ஜெபமணி, 2018). இடைநிலைப்பள்ளிகளில் கற்பிக்கப்படுகின்ற தமிழ் இலக்கியப் பாடம் மூன்று முதன்மைப் பாகங்களைக் கொண்டுள்ளது. அவை நாவல், நாடகம், கவிதை ஆகும். இவற்றுள் கவிதை எனும் பகுதியை மட்டும் இவ்வாய்விற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. தமிழ் இலக்கியப் பாடத்தில் கவிதை முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. ஆனால் மாணவர்கள் அவற்றுள் சில சிக்கல்கலையும் எதிர்நோக்குகிறார்கள், முக்கியமாகக் கவிதையைப் பயில்வதிலே அவர்கள் சிக்கல் எதிர்நோக்குகிறார்கள் (பாமா பெரியசாமி, 2018) என்ற ஒரு கருத்துண்டு.

இலக்கியக் கல்வியில் கவிதைப் பகுதியே உயர்ந்த பகுதியாகும் (Sababathy Venugopal, 2018). உலகில் எந்த மொழியிலும் கவிதைக் கற்பித்தல் என்பது இலக்கியப்பாடத்தில் முக்கியமானதாகவும் உன்னதமானதாகவும் கருதப்படுகின்றது (Sababathy Venugopal, 2018). கவிஞர்கள் தம் வாழ்க்கை நுகர்வுகளிலிருந்தும் பட்டறிவுகளிலிருந்தும் எழும் உணர்ச்சிகளையும் உயர் கருத்துகளையும் ஓசை நயம், சொல் நயம், பொருள் நயம் ஆகிய பண்புகள் நிறைந்த சொல்லொவியங்களால் வெளிப்படுத்துவர். கவிதைகளில் காணப்படும் உயர்நிலைக் கருத்துகளைத் தமிழ் இலக்கியம் பயிலும் மாணவர்கள் நுகரச் செய்தால் சமநிலை மாந்தனின் உருவாக்கத்திற்கு வழிவகுக்கும். இருப்பினும், இன்றைய நிலையில் மலேசியாவில் மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் பெற்றோர்களாலும் கவிதை இலக்கியம் பெரிதும் விரும்பப்படாத நிலையே நடைமுறையில் காணப்படுகிறது (Sababathy Venugopal, 2018). அதுமட்டுமில்லாமல், பள்ளி மாணவர்களுக்கு அறவே ஆர்வமற்ற ஒன்றாகவும் ஆசிரியர்களுக்கு அது கூடுதல் சுமையைத் தருகின்ற ஒன்றாகவும் இந்தக் கவிதை இலக்கியம் காணப்படுகின்றது (Xuezhou Xiao, 2019).

இலக்கியப் பாடம் பல நோக்கங்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் கவிதை திறனாய்வு செய்வதிலும் ஒன்றடங்கும். மலேசிய இடைநிலைப்பள்ளிகளில் படிவம் நான்கிலும் ஐந்திலும் கற்பிக்கப்படும் கவிதைப் பாடத்தில் கவிதைகளைத் திறனாய்வு செய்வதற்கு வழிவகுக்கின்றது (Ilampuranan Kiramany, 2021). அவற்றுள் காணப்படும் கவிதையின் சொற்சுவை, பொருட்சுவை, ஓசைநயம் ஆகியவற்றைத் திறனாய்வு செய்ய இந்தக் கவிதைப் பாடம் வழிவகுக்கின்றது. இருப்பினும், மாணவர்கள் இந்தக் கவிதைக் கூறுகளைத் திறனாய்வு செய்வதில்தான் பெருஞ் சிக்கலை எதிர்நோக்கிறார்கள் என்ற ஒரு கருத்து ஆங்கிலக் கவிதைக் கற்பித்தல் ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது (Fahd Salameh, 2012). இது தமிழ் இலக்கியப் பாடத்தில் கீழ் அடங்கியிருக்கும் கவிதைப் பாடத்திற்கும் ஒப்பாகும் என்பது ஐயமில்லை. கவிதைக்குப் பெரும்பாலும் கவிதைக் கூறுகளான ஓசை நயம், பொருள் நயம், சொல் நயம், அணி நயம் போன்றவை அழகூட்டும். இவ்வாய்வில் ஓசை நயம் எனும் கவிதைக் கூற்றில் மாணவர்கள் எதிர்நோக்கும் சிக்கலை மட்டும் மையப்படுத்தியமைந்துள்ளது.

**ஆய்வுச் சிக்கல்**

மலேசிய இடைநிலைப்பள்ளிகளில் படிவம் நான்கு மாணவர்களுக்கும் படிவம் ஐந்து மாணவர்களுக்கும் தமிழ் இலக்கியப் பாடம் கற்பிக்கப்படுகின்றது. இந்தத் தமிழ் இலக்கியப் பாடத்தில் கவிதை, நாவல், நாடகம் என்ற மூன்றனையும் இம்மாணவர்களுக்குக் கற்பிக்கப்படுகின்றன. தைப்பிங் வட்டாரத்தில் இருக்கும் இடைநிலைப்பள்ளிகளில் தமிழ் இலக்கியம் பாடம் கற்பிக்கப்படுகின்ற தமிழாசிரியர்களிடம் கவிதைக் கற்பித்தல் குறித்துச் சில பரிந்துரைகளை அதில் இருக்கும் சிக்கல்களையும் கேட்கப்பட்டுள்ளன. ஆசிரியர்களிடம் பரிந்துரைகளின் வழி சில படிவம் 5 தமிழ் இலக்கியப் பாடம் பயிலும் மாணவர்கள் மரபு கவிதைப் பகுதியில் இருக்கும் ஓசை நயத்தில் சிக்கல் எதிர்நோக்குகிறார்கள் எனும் சிக்கல் கண்டறியப்பட்டது. ஆசிரியர்களின் பரிந்துரையே இந்த ஆய்வை மேற்கொள்வதற்குக் காரணமாக அமைந்துள்ளது. ஆக, மரபு கவிதையின் ஓசை நயங்களில் படிவம் 5 தமிழ் இலக்கியம் பயிலும் சிக்கல் எதிர்நோக்குகிறார்கள் எனும் சிக்கலை மையப்படுத்தி இவ்வாய்வு எடுத்தாளப்பட்டுள்ளது. அவ்வகையில் இந்த ஆய்வு மூன்று நோக்கங்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவை படிவம் 5 தமிழ் இலக்கியப் பாடம் பயிலும் மாணவர்களிடையே:

i. மரபு கவிதையின் ஓசை நயங்கள் மீதான புரிதல் நிலையைக் கண்டறிதல்.
ii. மரபு கவிதையின் ஓசை நயங்களைப் பயில்வதிலும் கண்டறிவதிலும் எதிர்நோக்கும் சிக்கல்களுக்கான காரணங்களைக் கண்டறிதல்.
iii. மரபு கவிதையின் ஓசை நயங்களைப் பயில்வதிலும் கண்டறிவதிலும் மாணவர்களிடையே ஏற்படும் சிக்கல்களைக் களைய தீர்வுகளைக் கண்டறிதல்.

**ஆய்வு நெறிமுறை**

இஃது ஓர் அளவாய்வாகும். தைப்பிங் வட்டாரத்தில் அமைந்த இடைநிலைப்பள்ளிகளில் தமிழ் இலக்கியப் பாடம் பயிலும் ஐந்தாம் படிவ மாணவர்களைக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. Error Analysis கோட்பாடு இந்த ஆய்வில் ஆளப்பட்டுள்ளது. ஆய்வாளர் இந்த ஆய்விற்கு 20 படிவம் 5 தமிழ் இலக்கியப் பாட மாணவர்களைத் ஆய்வு மாதிரிகளாக உட்படுத்தியுள்ளார். இதில் 11 ஆண் மாணவர்களும் 9 பெண் மாணவர்களும் அடங்குவர். இவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு அப்பள்ளிகளில் இருக்கும் தமிழாசிரியர்களிடம் சில பரிந்துரைகள் கேட்கப்பட்டன. இவ்வாய்வில் குறிக்கப்பட்ட 3 நோக்கங்களில் முதல் இரண்டு நோக்கங்களுக்கு மதிப்பீட்டுத் தாள் மூலமாகத் தரவுகள் திரட்டப்பட்டது. திரட்டப்பட்ட தரவுகள் அளவுசார் விளக்கமுறையிலும் பண்புசார் விளக்கமுறையிலும் விளக்கப்பட்டுள்ளன. மூன்றாவது நோக்கமானது, 5 இடைநிலைப்பள்ளித் தமிழாசிரியர்களுடன் நேர்காணல் நடத்தப்பட்டுத் தரவுகள் திரட்டப்பட்டன. திரட்டப்பட்ட தரவுகள் யாவும் பண்புசார் விளக்கமுறையில் விளக்கப்பட்டுள்ளன.

**ஆய்வு அணுகுமுறை**

இந்த ஆய்வுக்கு அளவுசார் ஆராய்ச்சி அணுகுமுறையும் பண்புசார் ஆராய்ச்சி அணுகுமுறையும் பயன்படுத்தப்பட்டுள்ளன. தைப்பிங் வட்டாரத்திலுள்ள 10 இடைநிலைப்பள்ளிகளில் தமிழ் இலக்கியப் பாடம் பயிலும் 20 படிவம் ஐந்து மாணவர்கள் இவ்வாய்விற்கு ஆய்வு மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். ஆய்வு முடிவிற்கு, Krejcie & Morgan மாதிரி அட்டவணையை மையப்படுத்தி, இவ்வாய்வின் தரவாளர்களாக அமைந்த 20 படிவம் 5 தமிழ் இலக்கியப் பாட மாணவர்களில் 19 மாணவர்களின் முடிவு மட்டும் தோராயமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன. இவ்வாய்வு மூன்று நோக்கங்கள் கொண்டுள்ளதால், ஒவ்வொரு நோக்கங்களைக் கண்டறிய வெவ்வேறான ஆய்வுக் கருவிகள் பயன்படுத்தப்பட்டன. ஐந்தாம் படிவ மாணவர்களின் கவிதைக் கூறுகள் மீதான புரிதலைக் கண்டறியவதற்கு 20 ஓசை நயங்கள் கேள்விகள் கொண்ட மதிப்பீட்டுத் தாள் ஆய்வு மாதிரிகளுக்கு வழங்கப்பட்டன. மதிப்பீட்டுத் தாளில் கவிதைக் கூறுகள் கேள்விகளானது ‘கவிதைப் பொழில்’ என்கிற மரபு கவிதை நூலை மையப்படுத்தியே அமைந்துள்ளது. மேலும், ஆய்வாளர் மதிப்பீட்டுத் தாளிற்குப் புள்ளிப் பாகுபாடும் வழங்கியுள்ளார். அட்டவணை ஒன்று ஆய்வாளர் மதிப்பீட்டுத் தாளிற்கு வழங்கியுள்ள புள்ளிப் பாகுபாட்டினை விளக்குகிறது.

| புள்ளிப் பாகுப்பாடு | புள்ளித் தர நிலை | தரம் | புரிதல் நிலை (%) |
|---|---|---|---|
| 36 – 40 | மிகச் சிறப்பு | A | 85 – 100 |
| 31 – 35 | சிறப்பு | B | 76 – 84 |
| 26 – 30 | நடுத்தரம் | C | 61 – 75 |
| 20 – 25 | திருப்தி | D | 46 – 60 |
| 11 - 19 | இழிவு | E | 30 – 45 |
| 0 – 10 | புரிதல் இல்லை | F | 0 – 29 |

**அட்டவணை 1: மதிப்பீட்டுத் தாளின் புள்ளிப் பாகுபாடும் புரிதல் நிலையும்**

ஆய்வு மாதிரிகளின் புரிதல் நிலையைக் கணக்கிட, ஆய்வாளர் கீழே கொடுக்கப்பட்டுள்ள கணக்கியல் முறையைப் (Mathematical Formulae) பயன்படுத்தியுள்ளார்:

$$\text{மாணவர்களின் புரிதல் நிலை} = \frac{(\text{மாணவர் பெற்ற புள்ளி} \times 2) \times 100\%}{40}$$

இரண்டாவது நோக்கத்தின் தரவுகளைத் திரட்ட ஆய்வாளர் Likert Scale மதிப்பீட்டுத் தாளை ஆய்வு மாதிரிகளுக்கு வழங்கியுள்ளார். மூன்றாவது நோக்கத்திற்கு ஆய்வாளர் 5 இடைநிலைப்பள்ளித் தமிழ் இலக்கிய ஆசிரியர்களை நேர்காணல் செய்துள்ளார்.

**ஆய்வுக் கண்டுபிடிப்பு**

**நோக்கம் 1: படிவம் 5 மாணவர்களிடைய மரபு கவிதைகளின் ஓசை நயங்கள் மீதான புரிதலைக் கண்டறிதல்**

இவ்வாய்வின் முதல் நோக்கமானது படிவம் 5 மாணவர்களிடையே கவிதைகளின் ஓசை நயங்கள் மீதான புரிதல் நிலையைக் கண்டறிவதாகும். இவ்வாய்வின் முதல் நோக்கத்தைக் கண்டறிய 20 படிவம் 5 மாணவர்களுக்கு 20 ஓசை நயங்கள் கேள்விகள் கொண்ட மதிப்பீட்டுத் தாள் ஆய்வாளர் வழங்கியுள்ளார். கேள்விகள் அனைத்தும் 'SPM தமிழ் இலக்கியம் தேர்வுப் பாசறை' நூலிருந்தும் 2016 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரை SPM தமிழ் இலக்கியத் தேர்வுத் தாளிலிருந்தும் எடுக்கப்பட்டன. மதிப்பீட்டுத் தாளில் கேள்விகள் அனைத்தும் 4 பாகங்களாகப் பிரிப்பட்டது. பாகம் ஒன்றில் 5 எதுகை தொடர்பான கேள்விகளும், பாகம் இரண்டில் 5 மோனை தொடர்பான கேள்விகளும், பாகம் மூன்றில் 5 சந்தம் தொடர்பான கேள்விகளும், பாகம் நான்கில் 5 இயைபு தொடர்பான கேள்விகளும் என்று பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு கேள்விக்கும் 2 புள்ளி வழங்கப்பட்டன. ஆக, ஆய்வு மாதிரிகள் மொத்தம் 40 புள்ளி பெறுவர். ஆய்வு மாதிரிகளை மதிப்பீடு செய்த பிறகு, ஆய்வாளர் ஆய்வின் முதல் நோக்கத்தின் முடிவுகளைப் பகுத்துள்ளார். ஆய்வு முடிவுகளைப் பகுத்தாயும் போது மாதிரிகளுக்கு மாற்றுப் பெயர் (Pseudonym) வழங்கப்பட்டன. ஆய்வு மாதிரிகளின் புரிதல் நிலையைக் கணக்கிட, ஆய்வாளர் கீழே கொடுக்கப்பட்டுள்ள கணக்கியல் முறையைப் (Mathematical Formulae) பயன்படுத்தியுள்ளார்:

$$\text{மாணவர்களின் புரிதல் நிலை} = \frac{(\text{மாணவர் பெற்ற புள்ளி} \times 2) \times 100\%}{40}$$

| எண் | மாதிரிகள் | புள்ளிகள் | தரம் | புரிதல் நிலை (%) |
|---|---|---|---|---|
| 1 | A | 24 | *D* | 60 |
| 2 | B | 24 | *D* | 60 |
| 3 | C | 28 | *C* | 70 |
| 4 | D | 28 | *C* | 70 |
| 5 | E | 30 | *C* | 75 |
| 6 | F | 20 | *D* | 50 |
| 7 | G | 32 | *B* | 80 |
| 8 | H | 18 | *E* | 45 |
| 9 | I | 26 | *C* | 65 |

| | | | | |
|---|---|---|---|---|
| 10 | J | 32 | *B* | 80 |
| 11 | K | 22 | *D* | 55 |
| 12 | L | 16 | *E* | 40 |
| 13 | M | 6 | *F* | 15 |
| 14 | N | 10 | *F* | 25 |
| 15 | O | 16 | *E* | 40 |
| 16 | P | 38 | *A* | 95 |
| 17 | Q | 20 | *D* | 50 |
| 18 | R | 10 | *F* | 25 |
| 19 | S | 36 | *A* | 90 |

அட்டவணை 2: படிவம் 5 மாணவர்களிடைய கவிதைகளின் ஓசை நயங்கள் மீதான புரிதல் நிலை

மேற்காணும் அட்டவணை இரண்டை ஆராயுமிடத்து, படிவம் 5 மாணவர்களிடைய கவிதைகளின் ஓசை நயங்கள் மீதான புரிதல் நிலையைக் காட்டுகிறது. அவற்றுள் 2 மாணவர்கள் (10.5%) A தரத்தையும், 2 மாணவர்கள் (10.5%) B தரத்தையும், 4 மாணவர்கள் (21.1%) C தரத்தையும், 5 மாணவர்கள் (26.3%) D தரத்தையும், 3 மாணவர்கள் (15.8%) E தரத்தையும், 3 மாணவர்கள் (15.8%) F தரத்தையும் கொண்டுள்ளனர். ஆக, மேற்கண்ட ஆய்வு முடிவுகள் மூலம் படிவம் 5 மாணவர்கள் ஓசை நயங்கள் மீது சற்றுக் குறைவான புரிதல் நிலையைக் கொண்டு இருப்பதாகக் காணப்படுகிறது. அவற்றுள் திருப்தி (D) நிலையே மாணவர்களிடையே அதிகமாகக் காணப்படுகிறது.

**நோக்கம் 2: படிவம் 5 மாணவர்களிடையே மரபு கவிதையின் ஓசை நயங்களைப் பயில்வதிலும் கண்டறிவதிலும் எதிர்நோக்கும் சிக்கல்களுக்கான காரணங்களைக் கண்டறிதல்**

இவ்வாய்வின் இரண்டாவது நோக்கமானது, படிவம் 5 மாணவர்களிடையே ஓசை நயங்களைப் பயில்வதிலும் கண்டறிவதிலும் எதிர்நோக்கும் சிக்கல்களுக்கான காரணங்களைக் கண்டறிவதாகும். இவ்வாய்வின் நோக்கத்தைக் கண்டறிய, 5 படிநிலை கொண்ட Likert Scale மதிப்பீட்டுத் தாளை (Likert Scale Questionnaire) ஆய்வாளர் ஆய்வுக் கருவியாக 20 மாணவர்களுக்குப் பயன்படுத்தினார். அவற்றுள் மாதிரிகளின் ஒப்புதல் நிலையும் (Respondents' level of agreement) குறிப்பிடப்பட்டுள்ளன. அட்டவணை மூன்றில் ஆய்வாளர் பகுக்கப்பட்ட ஒப்புதல் நிலைகள் விளக்கப்பட்டுள்ளன.

| Scale | மாதிரிகளின் ஒப்புதல் | ஒப்புதல் நிலை (Level of Agreement) |
|---|---|---|
| 1 | முற்றிலும் முரண்படுகிறோம் | 1 - 20% |
| 2 | முரண்படுகிறோம் | 21 - 40% |
| 3 | உறுதியாகத் தெரியவில்லை | 41 - 60% |

| | | |
|---|---|---|
| 4 | ஒப்புக்கொள்கிறோம் | 61 - 80% |
| 5 | முற்றிலும் ஒப்புக்கொள்கிறோம் | 81 - 100% |

**அட்டவணை 3: மாதிரிகளின்**
**ஒப்புதல் நிலைகள்**

ஓசை நயத்தில் மாணவர்கள் எதிர்நோக்கும் சிக்கலுக்கான சில காரணங்களை ஆய்வாளர் Likert Scale மதிப்பீட்டுத் தாளில் வழங்கினார். ஓசை நயத்தில் மாணவர்கள் எதிர்நோக்கும் சிக்கலுக்கான சில காரணங்களை ஆய்வாளர் கல்வி வல்லுநர்களான X,Y,Z அவர்களின் மூலம் பரிந்துரையாக எடுத்துக் கொண்டார். மேற்காணும் அட்டவணை மூன்றை மையப்படுத்தி, இவ்வாய்வில் உட்படுத்தப்பட்ட ஆய்வு மாதிரிகள் ஆய்வாளர் Likert Scale மதிப்பீட்டுத் தாளில் வழங்கப்பட்ட காரணங்களுக்கு தங்களின் ஒப்புதலைத் தெரிவித்துள்ளனர். கீழ்க்காணும் அட்டவணை நான்கில், ஆய்வு மாதிரிகளின் மாதிரிகளின் ஒப்புதல் நிலையைக் காட்டுகிறது.

| **காரணங்கள்** | **ஒப்புதல் படிநிலை (Frequency/ %)** | | | | |
|---|---|---|---|---|---|
| | **1** | **2** | **3** | **4** | **5** |
| ஓசை நயக் கூறுகள் எளிதில் புரியவில்லை | 2 (10%) | 0 | 1 (5%) | 5(25%) | 12(60%) |
| எதுகையைக் கண்டறிவதில் குழப்பம் ஏற்படுகின்றது | 0 | 2(10%) | 4(20%) | 6(30%) | 8 (40%) |
| ஆசிரியர்களின் வழிகாட்டி குறைவாக உள்ளது | 2 (10%) | 0 | 0 | 8(40%) | 10(50%) |
| மோனைகளின் இணைகளைப் பகுத்தாய சிரமமாக உள்ளது காரணம் அதன் விதி அதிகமாக உள்ளது | 2 (10%) | 0 | 3(15%) | 6(30%) | 9 (45%) |
| கவிதையில் சந்தத்தையும் இயைபையும் கண்டறிந்து பகுத்தாய்வதில் குழப்பம் ஏற்படுகின்றது. | 3 (15%) | 3(15%) | 0 | 4(20%) | 10(50%) |
| கவிதை வழிகாட்டி நூல் ஒன்று மாணவர்களுக்கு இல்லை | 0 | 0 | 0 | 3(15%) | 17(85%) |
| ஓசை நயங்களைத் திறனாய்வு செய்யும் திறனும் யாப்பியல் அறிவும் குன்றிய நிலையில் உள்ளது | 4 (20%) | 1 (5%) | 0 | 2(10%) | 13(65%) |

அட்டவணை 4: படிவம் 5 தமிழ் இலக்கியப் பாட மாணவர்களின் ஒப்புதல் நிலை

மேற்காணும் அட்டவணை நான்கை ஆராயுமிடத்து, படிவம் 5 மாணவர்கள் ஓசை நயங்களைப் பயில்வதிலும் கண்டறிவதிலும் எதிர்நோக்கும் சிக்கல்களுக்கான காரணங்களுக்குத் தங்களின் ஒப்புதலைத் தெரிவித்துள்ளனர். பரிந்துரைக்கப்பட்ட 7 காரணங்களில், படிவம் 5 மாணவர்கள் பெரும்பாலானோர் ஐந்தாம் படிநிலையில் (Scale 5) தங்களின் ஒப்புதலைத் தெரிவித்துள்ளனர். அவற்றுள், கவிதை வழிகாட்டி நூல் ஒன்றில்லை

(85%) என்ற ஒரு காரணத்தையும் ஓசை நயங்களைத் திறனாய்வு செய்யும் திறனும் யாப்பியல் அறிவும் குன்றிய நிலையில் உள்ளது (65%) என்ற காரணத்தையும் அதிக அளவில் ஒப்புக்கொண்டுள்ளனர். அதனைத் தொடர்ந்து, ஓசை நயங்களை எளிதில் புரிந்துகொள்ள இயலவில்லை (60%) என்ற ஒரு காரணத்தையும் ஆசிரியர்களின் வழிகாட்டி குறைவாக உள்ளது (50%) என்ற ஒரு காரணத்தையும் கவிதையில் சந்தத்தையும் இயைபையும் கண்டறிந்து பகுத்தாய்வதில் குழப்பம் ஏற்படுகின்றது (50%) என்ற காரணத்தையும் முதன்மைக் காரணங்களாக ஒப்புக்கொண்டுள்ளனர். கவிதைகளில் இருக்கும் எதுகைகளைக் கண்டறிவதில் குழப்பம் அடைவதாகவும் மோனைகளின் விதிகள் அதிகமாக இருக்கும் காரணத்தினால் அவற்றைப் பகுத்தாய சிக்கல் எதிர்கொள்ளுவதாகவும் மாணவர்கள் முற்றிலும் ஒப்புக்கொண்டுள்ளனர். ஆக, ஆய்வின் முதல் நோக்கத்தில் கிடைக்கப்பெற்ற தரவுகளை ஆய்வின் இரண்டாம் நோக்கத்தின் தரவுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், படிவம் 5 மாணவர்களுக்குக் கவிதைகளின் ஓசை நயங்கள் மீதான புரிதல் நிலை திருப்தி நிலையில் இருப்பதற்கான காரணங்களை ஆராயும் போது, Likert Scale மதிப்பீட்டுத் தாளில் மாணவர்கள் தெரிவித்த ஒப்புதல்களே அம்மாணவர்களுக்குக் கவிதைகளின் ஓசை நயத்தில் மீதான இருக்கும் புரிதல் நிலை திருப்தி நிலையில் இருக்க சான்றாக அமைந்துள்ளது என்பதை இங்குத் தெளிவாக அறிய முடிகின்றது.

**நோக்கம் 3: மரபு கவிதையின் ஓசை நயங்களைப் பயில்வதிலும் கண்டறிவதிலும் மாணவர்களிடையே ஏற்படும் சிக்கல்களைக் களைய தீர்வுகளைக் கண்டறிதல்.**

இவ்வாய்வின் இறுதி நோக்கமானது, ஓசை நயங்களைப் பயில்வதிலும் கண்டறிவதிலும் மாணவர்களிடையே ஏற்படும் சிக்கல்களைக் களைய தீர்வுகளைக் கண்டறிதலாகும். இந்த நோக்கத்தை மேற்கொள்ள 5 இடைநிலைப்பள்ளித் தமிழ் இலக்கிய ஆசிரியர்களை நேர்காணல் செய்யப்பட்டனர். 10 ஆண்டுகளுக்கு மேல் கல்வியியல் துறையில் இருக்கும் தமிழ் இலக்கிய ஆசிரியர்களை மட்டுமே நேர்காணலுக்கு ஆய்வாளர் உட்படுத்தியுள்ளார். நேர்காணல் மூலம், ஓசை நயங்களைப் பயில்வதிலும் கண்டறிவதிலும் மாணவர்களிடையே ஏற்படும் சிக்கல்களைக் களைய ஆசிரியர்கள் பரிந்துரைத்த 3 தீர்வுகளை ஆய்வாளர் கண்டெடுத்துள்ளார்.

**I. ஆசிரியர்களுக்கான ‘தமிழ் இலக்கிய வழிகாட்டி’ நூலில் ஓசை நயங்களுக்கு அதிக அளவில் விளக்கம் கொடுக்க வேண்டும்**

இடைநிலைப்பள்ளியில் தமிழ் இலக்கியத்தைக் கற்பிக்க ஒவ்வொரு தமிழ் இலக்கிய ஆசிரியர்களுக்கு ‘தமிழ் இலக்கிய வழிகாட்டி நூல்’ ஒன்று கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவு வழங்கியுள்ளது. அவற்றுள் ஓசை நயங்களுக்கு வழங்கப்பட்ட விளக்கங்களும் எடுத்துகாட்டுகளும் குறைவாக இருப்பதாக நேர்காணலில் ஆசிரியர்கள் தெரிவித்திருந்தனர். அவ்வழிகாட்டி நூலில் குறைவான விளக்கங்களும் எடுத்துக்காட்டுகளும் இருக்கும் காரணத்தினால், குன்றிய அளவில் யாப்பியல் அறிவு கொண்டிருக்கும் ஆசிரியர்கள் வகுப்பில் மாணவர்களுக்குக் ஓசை நயங்களைக் கற்றுக் கொடுக்க சிரமப்படுகிறார்கள் என்ற ஒரு கருத்தையும், சில நேரங்களில் ஓசை நயங்களை வகுப்பில்

கற்றுக் கொடுக்காமல் ‘தமிழ் இலக்கிய வழிகாட்டி’ நூலில் ஒவ்வொரு கவிதைகளுக்கான வழங்கப்பட்ட ஓசை நயங்களின் விடைகளை மாணவர்களுக்குக் கொடுத்து அவர்களை மனனம் செய்யப் பணிக்கிறார்கள் என்ற ஒரு கருத்தையும் முன் வைத்தனர். இதன் விளைவால் மாணவர்களின் புரிதல் தான் பாதிப்படையும் என்று கருதினர். ஆக, இதனைத் தவிர்க்க கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவை இச்சூழலைக் கருத்தில் கொள்ள பரிந்துரைத்தனர். ஒரு கவிதையில் எதுகை, மோனை, சந்தம், இயைபு போன்றவற்றை எவ்வாறு கண்டறிய வேண்டும் என்ற விளக்கத்தையும், கண்டறிய வேண்டிய முறையையும் அதன் காரணத்தையும் அளிக்க வேண்டும் என்பதையும் ஆசிரியர்கள் நேர்காணலில் தெரிவித்திருந்தனர். மேலும், சில கவிதைகளில் இருக்கின்ற ஓர் அடியில் அல்லது ஒரு விருத்தத்தில் எதுகைகான விடைகளை ‘தமிழ் இலக்கிய வழிகாட்டி’ நூலில் இடம்பெற்றிருக்கமாட்டா. ஆனால், அதற்கு அடுத்து வருகின்ற அடிக்கோ விருத்தத்திற்கோ எதுகை வழங்கப்பட்டிருக்கும். ஏன் ஓர் அடியில் அல்லது விருத்தத்தில் எதுகை இடம்பெறவில்லை ஆனால் அதற்கு அடுத்து வரும் அடியில் அல்லது விருத்தத்தில் மட்டும் எதுகை இடம்பெற்றுள்ளது என்ற ஒரு சிக்கலுக்குத் தெளிவான விளக்கமும் காரணமும் ‘தமிழ் இலக்கிய வழிகாட்டி’ நூலில் இடம்பெறுவதில்லை. இதனால் மாணவர்களும் ஆசிரியர்களும் குழப்பம் அடையும் சூழ்நிலை ஏற்படுகின்றது என்று ஒரு கருத்தை ஆசிரியர் Z நேர்காணலில் தெரிவித்திருந்தார். அதுமட்டுமில்லாமல், ஒரு கவிதை எவ்வகையான பா வகையில் அமைந்துள்ளது என்பதனையும் ‘தமிழ் இலக்கிய வழிகாட்டி’ நூலில் இடம்பெறாத காரணத்தினால் தமிழ் இலக்கிய ஆசிரியர்களால் கவிதைகளின் ஓசை நயங்களைக் கற்பிக்க சிக்கல் எதிர்நோக்குவதாகவும், இதுவே மாணவர்கள் ஓசை நயங்களை நன்முறையில் புரிந்துகொள்ள தடையாக அமைவதாகவும் நேர்காணலில் ஆசிரியர் X தெரிவித்திருந்தார். சுருங்கக் கூறின், இடைநிலைப்பள்ளித் தமிழாசிரியர்களுக்காக வழங்கப்படுகின்ற ‘தமிழ் இலக்கிய வழிகாட்டி’ நூலில் எதுகை,மோனை, சந்தம், இயைபு அனைத்திற்கும் கூடுதல் விளக்கங்களையும் காரணங்களையும் அளிக்க வேண்டும் என்பதை ஆசிரியர் பெரிதும் வரவேற்கிறார்கள்.

### II. மாணவர்களுக்கான கவிதை வழிகாட்டி நூலும் பயிற்சிப் புத்தகமும் அதிக அளவில் இருத்தல்

மாணவர்களுக்குக் கவிதைப் பாடத்தை வகுப்பில் மட்டும் கற்பித்தால் போதாது. மாறாகக் கவிதையில் இருக்கும் உட்கூறுகளை மாணவர்கள் புரிந்துகொள்வதற்கும் அதனை எளிய முறையில் செய்வதற்கும் அவர்களுக்கு அதிக அளவில் பயிற்சிகள் தேவைப்படுகின்றது. அவ்வகையில் மாணவர்களுக்கு அதிக அளவில் கவிதை வழிகாட்டி நூல்களும் பயிற்சிப் புத்தகங்களும் வெளியிடப்பட வேண்டும் என்ற ஒரு தீர்க்கும் வழியை ஆசிரியர்கள் பரித்துரைத்தனர். அதுமட்டுமில்லாமல், கவிதைத் துறையிலும் யாப்பிலக்கணத்தில் வல்லுநர்களாக இருப்பவர்களும் மாணவர்களுக்குக் கவிதை வழிகாட்டி நூல் எழுதப்பட வேண்டும் என்றும் நேர்காணலில் ஆசிரியர்கள் தெரிவித்திருந்தனர்.

### III. கவிதைப் பாட வல்லுநர்கள் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கவிதைத் திறனாய்வு வகுப்பும் யாப்பியல் வகுப்பும் நடத்த வேண்டும்

தமிழ் இலக்கியப் பாடம் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை கவிதை, நாடகம் மற்றும் நாவலாகும். இவற்றுள் மாணவர்கள் கவிதைப் பகுதியில் மட்டுமே குறைவான புள்ளிகளைப் பெறுவர் என்ற கருத்தை நேர்காணலில் ஆசிரியர்கள் முன் வைத்தனர். இதற்குக் காரணம், மாணவர்கள் கவிதை என்றாலே கடினம், அவற்றைப் புரிந்துகொள்ள கடினம், இலக்கண விதிகள் அதிகமாக இருக்கும் என்ற ஒரு பயம் போன்றுவற்றை எல்லாம் நினைப்பதால் மாணவர்கள் கவிதையைப் பயில முன் வருவதில்லை. மாணவர்கள் இவ்வாறு நினைப்பதற்குத் தமிழ் ஆசிரியர்களிடம் இருக்கும் குறைவான யாப்பிலக்கண அறிவே (Poetry Content Knowledge) முதன்மைக் காரணமாகவும் அமைந்துள்ளது என்ற ஒரு கருத்து நேர்காணலில் அறிய வந்தது. ஆக, இதனைத் தவிர்க்க, கவிதைப் பாடத்தில் வல்லுநர்களாக இருப்பவர்கள் தமிழ் இலக்கிய மாணவர்களுக்குக் கவிதைத் திறனாய்வு வகுப்புகளும் ஆசிரியர்களுக்கு யாப்பியல் வகுப்புகளும் நடத்தப்பட வேண்டும் என்று நேர்காணலில் ஆசிரியர்கள் பரிந்துரைத்தனர். அதுமட்டுமில்லாமல், 21 - நூற்றாண்டு கவிதைக் கற்பித்தல் முறையைத் தமிழ் இலக்கிய ஆசிரியர்களுக்கு இந்தக் கவிதைப் பாட வல்லுநர்கள் கற்றுக் கொடுப்பதையும் ஆசிரியர்கள் பெரிதும் வரவேற்கின்றனர்.

## நிறைவுரை

இந்த ஆய்வில் மேற்கொள்ளப்பட்ட 3 நோக்கங்களுக்கும் தரவுகள் சேகரிக்கப்பட்டு, ஆய்வுக் கோட்பாட்டை மையப்படுத்தி விளக்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வானது தமிழ் இலக்கிய ஆசிரியர்களுக்கும் கவிதைப் பாட வல்லுநர்களுக்கும் துணைபுரியும். கவிதைப் பாடத்தில் தமிழ் இலக்கிய மாணவர்களின் நிலையை மேம்படுத்தவும், தமிழ் இலக்கிய ஆசிரியர்கள் கவிதைக் கற்பித்தலில் செம்மைபடுத்த உதவும் வகையிலும் இவ்வாய்வு அமைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமில்லாமல், தமிழ் இலக்கிய ஆசிரியர்கள் ஏன் யாப்பியல் (Poetry Knowledge) அறிவை மேம்படுத்த வேண்டும் என்ற ஒரு கேள்விக்கான பதிலையும் இவ்வாய்வின் மூலம் கிடைக்கப்படும். ஆக, தமிழ் இலக்கியப் பாடத்தில் மாற்றங்களையும் புதுமைகளையும் கொண்டு வருவதற்கு மாணவர்கள் பங்களிப்பு மட்டுமல்ல அனைத்துத் தரப்பினர்களின் உழைப்பும் தேவை என்பது இவ்வாய்வின் வழி உறுதியாகக் கூறலாம்.

## துணைநூற்பட்டியல்


Ariyani, L. D. (2019). Grammatical Mistakes Analysis of the Students in the Class of Poetry Analysis. Journal of UNSIQ, 78 -87.

Kiramany, I. (2021). AGAL VILAKKU NOVEL STRENGTHENS SECONDARY SCHOOL STUDENTS' SELF-ESTEEM ELEMENTS. Muallim Journal of Social Science and Humanities, 100 - 115.

KURIKULUM, B. P. (2016). BUKU PANDUAN KESUSASTERAAN TAMIL. PUTRAJAYA: KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA.

Nedumaran, M. (2019). SPM தமிழ் இலக்கியம் தேர்வுப் பாசறை. Kuala Lumpur: Uma Publications.

Periasamy, P. (2018). KAVITAI KARPITTALAI ELIMAIPADUTTUM TAMIL TIRAI ISAI PAADALKAL. Malaysian Journal of Social Sciences and Humanities, 303 - 313.

Salameh, F. A. (2012). Some Problems Students Face in English Poetry in Jordan: A Corpus-Driven Study of Students' Responses. International Forum of Teaching and Studies, 41 - 46.

Taher, A. (2011). Error analysis: A study of Swedish junior high school students' texts and grammar knowledge. Journal of Educational Science, 1 -34.

Venugopal, S. (2016). Poetry Teaching in literature subject of Malaysian secondary school: A few recommendation. Journal Of Tamil Education, 103 - 113.

Xiao, X. (2020). Research on Poetry Language Style Teaching System Based on Data Visualization. International Conference Proceeding Series , 451 - 454.

ஜெபமணி, ச. (2018). மலேசியத் தமிழ்க்கல்வி வரலாறு. சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.